# நற்செய்தி கதைப் புத்தகம்

## ஒன்று

இது என்னுடைய நற்செய்தி கதைப் புத்தகம் ஒன்று

என் பெயர்

________________________________________

நான் என்னுடைய நற்செய்தி கதைப் புத்தகம் ஒன்றை வாசிக்க முடியும்

இக்கதைகள் சிருஷ்டிகரான தேவனுடைய வேத புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

இக்கதைப் புத்தகத்தின் படங்களை வரைந்தவர்கள் இந்தியாவின் ஆதிவாசிக் குழந்தைகள்.
நற்செய்தி கதைப் புத்தகம் ஒன்று. கருத்து உரிமை 2013
இந்தியாவில் அச்சிடப்பட்டது. மேலும் விபரங்களுக்கு:
WBTC India, P.O. Box 8478, Bangalore 560084. info@wbtcindia.com





சிருஷ்டிகரான தேவன்.................. 2-9
மிகவும் வலிமையானவர்...........10-13
இருளில் மறைவு.......................14-24

# சிருஷ்டிகரான தேவன்

நட்சத்திரங்களை என்னால்
பார்க்க முடிகிறது.

நட்சத்திரங்கள் பாடுகின்றன.








மிருகங்களை என்னால்
பார்க்க முடிகிறது.

மிருகங்கள் பாடுகின்றன.



ஆவிகளை என்னால் பார்க்க முடிகிறது

ஆவிகள் பாடுகின்றன.








முதலாவது மனுஷனையும் மனுஷியையும் என்னால் பார்க்க முடிகிறது.

முதல் மனுஷனும் மனுஷியும் பாடுகிறார்கள்.

சிருஷ்டிகரான தேவன்
பேசுவதை என்னால் கேட்க
முடிகிறது,

'நான் உன்னை நேசிக்கிறேன்!'

நான் பாடத் துவங்குகிறேன்.








சிருஷ்டிகரான தேவன்
பேசுவதை என்னால்
கேட்க முடிகிறது,

'என்னுடைய
முழுமையான
உலகைக்
கவனித்துக்கொள்.'





எல்லாவற்றையும் என்னால்
கேட்க முடிகிறது

பாடல்...பாடல்...பாடல்.







சிருஷ்டிகரான தேவனை
எல்லாம் பாடுகின்றன.

சிருஷ்டிகரான தேவன்
எல்லாவற்றையும்
சிருஷ்டித்தார்.

# மிகவும் வலிமையானவர்

தீய ஆவி சொல்வதை
என்னால் கேட்க முடிகிறது,

‘நான் சிருஷ்டிகரான
தேவனைப் போலாவேன்.’







நல்ல ஆவிகள் சொல்வதை
என்னால் கேட்க முடிகிறது.

‘சிருஷ்டிகரான தேவனைப்
பாடுங்கள்.’




தீய ஆவிகளும் நல்ல ஆவிகளும் போராடுவதை என்னால் பார்க்க முடிகிறது.

நல்ல ஆவிகள் வெற்றி பெறுகின்றன.







தீய ஆவிகள் விழுவதை என்னால் பார்க்க முடிகிறது,

‘சிருஷ்டிகரான தேவன் வல்லமையானவர்!’

# இருளில் மறைவு

முதலாவது மனுஷனையும்
மனுஷியையும் என்னால்
பார்க்க முடிகிறது.

சிருஷ்டிகரான தேவன்
பேசுவதை என்னால் கேட்க
முடிகிறது,

‘நன்மை தீமையின்
மரத்திலிருந்து சாப்பிடாதே.’







முதல் மனுஷனும் மனுஷியும்
கீழ்ப்படியவில்லை...
கீழ்ப்படியவில்லை...
கீழ்ப்படியவில்லை.

தீய ஆவி சொல்வதை
என்னால் கேட்க முடிகிறது,

‘நீங்கள் சிருஷ்டிகரான
தேவனைப் போலாவீர்கள்.

நன்மை தீமையின்
மரத்திலிருந்து சாப்பிடுங்கள்.’








முதல் மனுஷி கவனிக்கிறாள்…
கவனிக்கிறாள்…
கவனிக்கிறாள்.

முதல் மனுஷி சொல்வதை
என்னால் கேட்க முடிகிறது.

'நான் சிருஷ்டிகரான
தேவனைப் போலாவேன்.

நன்மை தீமை மரத்திலிருந்து
நான் சாப்பிடுவேன்.'







முதல் மனுஷி சாப்பிடுகிறாள்...
சாப்பிடுகிறாள்...
சாப்பிடுகிறாள்.

முதல் மனுஷன் சொல்வதை
என்னால் கேட்க முடிகிறது.

'நான் சிருஷ்டிகரான
தேவனைப் போலாவேன்.

நன்மை தீமை மரத்திலிருந்து
நான் சாப்பிடுவேன்.'







முதல் மனுஷன்
சாப்பிடுகிறான்...
சாப்பிடுகிறான்...
சாப்பிடுகிறான்.

முதல் மனுஷன் மனுஷியை நான் பார்க்க முயற்சிக்கிறேன்.

முதல் மனுஷனும் மனுஷியும் ஒளிகிறார்கள்.








சிருஷ்டிகரான தேவன் பேசுவதை என்னால் கேட்க முடிகிறது,

‘நான் இன்னும் உங்களை நேசிக்கிறேன்.’

‘நான் உங்களை மீட்பேன்.
நீங்கள் என்னைக்
கண்டுகொள்வீர்கள்.’

சிருஷ்டிகரான தேவன்
வருகிறார்...

